<u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தேனி பிரிவு அலுவலகத்தை அணுகி, தன்னுடைய பெயரில் உள்ள 6 சர்வே எண்களின் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ஆன்லைன் மூலமாக குள்ளபுரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணபப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைக்கு அனுப்புவதற்கு திரு.விஜயன், கிராம நிர்வாக அதிகாரி, குள்ளபுரம் கிராமம், தேனி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.50,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 20.04.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.விஜயன், கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் புகார்தாரரிடமிருந்து ரூ.50,000/- கையூட்டாக கேட்டு பெற்று, பணத்தை திரு.இளமுருகன், தனிநபர் வசம் பாதுகாப்பாக வைத்திருக்க கொடுத்தார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Theni Detachment, and gave complaint that he had applied for 6 survey numbers patta name transfer through online at Kullapuram Village Administrative Office, Theni District, for which Tr.Vijayan, Village Administrative Officer, Kullapuram Village, Theni District, demanded Rs.50,000/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized today 20.04.2022.

During trap proceedings, Tr.Vijayan, Village Administrative Officer reiterated his earlier demand and received the bribe amount of Rs.50,000/- from the complainant and gave it to Tr.Ilamurugan, Private Individual for safe keeping. Both accused were arrested.